ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

லௌகிகர்:— சாஸ்திரிகளவாள்! ஸௌக்கியமா? நான் தூரதேசயாத்திரை செய்துவந்ததால் தங்களுடைய தரிசனம் கிடைத்து வெகுநாள் ஆயிற்று.

வைதிகர்:— ஸௌக்கியந்தான். எங்கெல்லாம் போயிருந்தீர்? என்னென்ன விசேஷம்?

லௌகி:— அநேக க்ஷேத்திரங்கள் சென்றிருந்தேன். இந்தியா சட்டஸபையிலும் அடுத்தபடி ராஜாங்கஸபையிலும் விவாஹமசோதா சட்டமாகிவிட்டதே. இனி அதன்படி யாவரும் நடக்கவேண்டியதுதானே ஒழுங்கான கார்யம். அதைவிட்டு வைதிகரெல்லோரும் இன்னும் மயக்கங்கொண்டு அதை எதிர்ப்பதுபோல் கூட்டம்போட்டுக் கூச்சலிடுகின்றனரே? இது பலிக்குமா? என்று பிராமணஜாதியிற் பிறந்த சிலர் வைதிகர்களை வேறுபடுத்திப்பேசி அலக்ஷியம்செய்துவருகிறார்கள். இவைகளையெல்லாம் கேட்கும்போது வைதிகதர்மம் இந்த நிலைமைக்கு வந்துவிட்டதேயென்று பெருங்கவலையாயிருக்கின்றது.

வைதி:— எந்த ஸபையில் எது சட்டமானாலும் நமது வைதிகஸபையில் சட்டமானதைத்தான் வைதிகர் பின்பற்றவேண்டியது. நமது வைதிகமதம் கல்பாதிதொடங்கி ப்ரம்மதேவரது ஐம்பதுவயது பூர்த்தியான பின் தற்காலம் நடைபெறும் ஐம்பத்தோராவது ஆண்டின் ஆரம்பகாலமாகிய நாளதுவரையிலும் எத்தனையோ வைதிகமதத்தைத் தழுவின சக்கிரவர்த்திகளால் ஆதரிக்கப்பட்டும் ஆசாரியபுருஷர்களால் ஸ்தாபிக்கப்பட்டும் வைதிகபரம்பரையில் விளங்கிவருகின்றது. விபரீதமதமுள்ள மன்னர்கள் நம் இந்தியாவை ஆளுகையிலும் இந்த வைதிகமதத்தை வேரைக் களைந்து வென்னீர் விட்டுத் தொலைத்துவிடவேணுமென்று எவ்வளவோ பாடுபட்டும் நம் இந்துக்களுக்கு உயிர்நிலையான கோயில், குளம் முதலியவைகளை இடித்தும், அவர்களது முயற்சிதான் பயன்படாமல் போயிற்றேயன்றி நம் வைதிகமதம் ராகுவினின்று விலகிய சந்திரன்போல் பிரகாசித்துக்கொண்டுதான் வருகிறது. இந்த கோரமான கலியுகம் முடிவுவரை நிலைத்துத்தானிருக்கப்போகிறது. இந்த வைதிகமதத்தைப் பிரவிருத்திசெய்வித்தவர் நாமல்ல. நம்போலியவர்களுமல்ல. பரமேசுவரனல்லவா இதற்குப் பிரவர்த்தகர். இதற்கு ஏதாவது கெடுதி நேரிட்டால் காப்பாற்ற அவரிருக்கிறார். வைதிகர் பிரவர்த்தி பலிக்கும் கவலை வேண்டாம்.

சுபம்.! பத்திராதிபர்,

ஆர்யதர்மம்.

சுக்ல-௵ ஐப்பசி-௴ ௨௯

பிராம்மணரில் அவைதிகருண்டா?

இக்கேள்விக்கு பதில் சொல்லவேண்டியது தற்சமயம் அவசியமாயிருக்கின்றது. தற்காலத்தில் பிராம்மணரெனப்படுவோர் அவர்களது பெயருக்கு முன்னும் பின்னும் சில உபநாமங்களையும் சேர்த்து வழங்கப்படுகிறார்கள். அவற்றுள் சிலது அதன் பொருளை அனுஸரித்தும் அனுஸரிக்காமலும் ஸாமான்யமாய் பெயருக்கு முந்தி உபயோகிக்கப்படுகின்றது. அதாவது—ப்ரம்மஸ்ரீ, மகா-ர-ஸ்ரீ இவைபோன்றது. வேறு சிலது ஸபைகளிலோ, ராஜாங்கங்களிலோ, பிருதாகக் கொடுக்கப்பட்டது. மஹாமஹோபாத்தியாய, மஹோபதேசக, சாஸ்திரரத்னாகர இவைபோன்றதும், ராவ்பகதூர், ராஜாபகதூர் இவைபோன்றதுமாகும். பெயருக்குப்பிந்தி ஐயர், சாஸ்திரி, கனபாடி, சிரௌதி, தீக்ஷிதர், ஆசாரி, ராயர் இவைபோன்றன அவரவரது குலபரம்பரையாயும் புதிதாயும் உபநாமங்களாக வைத்துக்கொள்ளப்படுகின்றன. நமது ஸ்மிருதிகளில் சர்மா என்ற உபநாமம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதையே சிலர் வைத்துக்கொள்ளுகிறார்கள். உபநாமத்தைத்தவிர பிரதானமான பெயர் நாமகரணகாலத்தில் தாய்தந்தைகளால் வைக்கப்படுகின்றது. அந்தப்பெயர் ப்ராம்மணர்களுக்குரிய நாற்பது ஸம்ஸ்காரங்களுளொன்றாகையால் அது வைதிகமென்றே சொல்லவேண்டும். ஆகவே அந்தப் பெயரை முன்னிட்டு அழைக்கப்படுமவர் ஐயராயினும் சாஸ்திரியாயினும் மற்றுமெவராயினும் அவரெல்லோரும் வைதிகராகவே ஆவார். ஒருக்காலும் அவைதிகராக மாட்டார். தற்காலத்திய புதிய பரிஷ்காரப்படி தலையை மொட்டை போடுவதுபோல் சிலர் பெயரையும் மொட்டையாக, ஸுப்ரமணியம், ஸதாசிவம், என்பதுபோல் வைத்துகொண்டாலும் அதுவும் நாமகரண ஸம்ஸ்காரத்தில் வைக்கப்பட்டதாகவே வைதிகமானது

தான். நாளது வரையிலும்பிராம்மணகுலத்திலுதித்தவர்களுக்குள் இந்த ஸம்ஸ்காரம் செய்யப்படாதார் யாருமிருக்கமாட்டார். ஒரு ஸமயம் பால்யவிவாகத்தடை மசோதாப் போல் பொதுவாகவே ஸம்ஸ்காரத்தடை மசோதாவொன்று ஒரு மஹானுபாவரால் கொண்டுவரப்பட்டு, அது நமது காருண்யகெவர்மண்டிலும் சட்டமாக்கப்பட்டுவிடுமானல் அப்பொழுது பெயர் எப்படி வருமோ பார்த்துக்கொள்வோம். இப்பொழுதுள்ள பிராம்மண குலத்தார் யாவரும் வைதிகமான பெயருண்டயவர் தான். ஆகவே வைதிகர் தான். அப்படியிருக்கையில் சிலர் வைதிகரை வேறுபடுத்திப் பேசுவது எக்காரணம்பற்றியோ தெரியவில்லை. பழைய கர்நடகப் பேச்சைப்பேசிக்கொண்டிருப்பவர் வைதிகரென ஒதுக்கப்படுகிறரென்றல், அப்பொழுது புதியபுது நாடகப்பேச்சைப் பேசுவோர் வைதிகரல்லரென்று ஏற்படுகின்றது. வைதிகப்பெயரை வைத்துக்கொண்டுமிவர் வைதிககோஷ்டியைவிட்டு விலகுவது சரியல்ல. ஆயினும் விலகிவிடுவார்களானல் அவர்கள் வைதிகர்களை சீர்திருத்தப் புறப்படுவது உசிதமேயல்லாத காரியம். வைதிக கோஷ்டியில் வேதார்த்தங்களைத்தெரிவிக்கப் பண்டிதர்கள் கிடைக்காத துர்பிக்ஷகாலமின்னும் வந்துவிடவில்லை. அத்தகைய பண்டிதர்கள் சொல்லும் உபதேசத்தைவிட்டு அவைதிகரது பேத்தலையா விவேகிகள் கேட்பார்கள். தான் கெட்டது போதாதென்று பிறரையும் கெடுக்கப்பார்க்கும் அவைதிகர்களது ஸாஹஸத்தைப் பார்க்க மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இவர்களுக்கு பண்டிதர்களான பலவைதிகர்கள் சொல்லும் சாஸ்திரார்த்தம் சரியல்லவாம். அவைதிக சிரோமணியொருவன் கூறிவிட்டது மிக ஒழுங்காயிருக்கிறதாம். பிறவிக்குருடர்பெருங்கூட்டம் போட்டாலும் வழிகாட்ட வல்லவரல்ல. கண்ணுடையோன் ஒருவனுயினும் வழிகாட்டவல்லவன் என்பதாதி உதாஹரணங்களைக் கொடுத்து பண்டிதரான வைதிகரொருவர் கூறுவதே சரியான தர்மமென்று நமது சாஸ்திரம் கூறுகின்றது. ஆகையால் பிராம்மணகுலத்துதித்தவர் தங்களை வைதிககோஷ்டியினின்று பிரித்துக்கொள்ளாமல் வைதிக ஸித்தாந்தத்தையே அவலம்பித்து சிரேயஸ்ஸையடையும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறர்கள். சுபம்.

பத்திராதிபர்.

உபசாரப்பத்திரம்.

நம் சாஸ்திரவிஷயமாய்ச் சட்டஸபையில் விவாகத்தைப்பற்றி விசேஷமாய்ப்பிரயாஸைப்பட்டு சண்டைபோட்டவர் M.S.சேஷய்யங்கார் என்பதை யாவருமறிவர். இவர் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலிஜில்லாக்களின்சார்பாகத் தெரிந்தெடுக்கப்பட்டவரானதால் இவர் அந்த செய்த வேலையைப் பாராட்டுவதற்காக 3—11—29-ல் மதுரையில் ஆஸ்திகமஹாஜனங்களின் பொதுக்கூட்டம் ஒன்று சேதுபதி உயர்தர கலாசாலையில் நடைபெற்றது. அன்று சபையை ஸ்ரீமான் K. R. வெங்கடராமய்யரவர்கள் அட்வோகேட் M L.C. அக்கிராஸனம் வகித்து அலங்கரித்தனர். மங்களசுலோகத்திற்குப் பிறகு அக்கிராஸனரின் முன்னுரையுடன் உபசாரப்பத்திரங்கள் தேவபாஷை, தேசபஷை, ராஜாபாஷையிலும் முறையே படித்துக் கொடுக்கப்பெற்றது. அப்பத்திரிகையின் வாசகத்தை அடியிற்காணலாம். இதில் இங்கு சிலருக்கு ஓர் ஆசங்கை உதிக்கலாம். எங்கும் உபசாரப்பத்திரம் கொடுப்பதென்றால் கார்யத்தைச் சிரமப்பட்டு பொதுஜனஹிதமாய் முடித்தவருக்காவது, அல்லது முடிக்கப்போகிறவருக்கு உத்ஸாகத்தை உண்டுபண்ணவாவது கொடுக்கலாம். இங்கோ இரண்டுமில்லை. மற்றும் செய்த காரியம் வீணும் ஆய்விட்டது. இனி எதற்காக இது என்பதே. இனியும் இச்சட்டத்தை அனுவதிக்கும் ஜனங்களும் பலர் இருக்கலாம். அவர்களுக்கு இவர் செய்த கார்யம் வெறுக்கத்தக்கது. அவ்விதமிருக்கஎவ்வாறுகொடுக்கலாமென்று. இவ்விஷயத்தில் நாங்கள் தகுந்த ஸமாதானமிருக்கிறதென்பதை வெளியிடவே இங்கு இறங்கினோம். நம் தேசத்தில் எப்போதும் புகழத்தக்க காரியம் செய்தவனைக் கொண்டாடுவதுண்டு. சட்டசபையில் நம்மவர் ஸ்தானம் வகிப்பதும் அவ்விதம் நாம் ஓட்டுக்கொடுப்பதும் சகஜமாய் இருக்கிறதே தவிர, ஓட்டு பெற்று அங்கு போகிறவன் இன்னாருக்குப் பிரதிநிதியாய் வந்திருப்பதால் அவர்களுக்குப் பிடித்த காரியத்தைத் தான் செய்யவேண்டுமென்று உணர்கிறதில்லை. அவன் ஏராளமான பணச்செலவு தேகசிரமத்துடன் அப்பதவியைப்பெற ஆரம்பிப்பது தன்னுடைய பலவித பலனை உத்தேசித்தே தவிற பொதுக்கார்யத்திற்கல்ல. ஓட்டு கொடுக்கிறவர்களும் அதன் அர்த்தம் இன்னதென்று உணராமல் ஏதோ தாத்காலிகமான வரும்படியையும் தாக்ஷிண்யத்தையும் உத்

தேசித்துத் தன் வாக்குறுதியைக் கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே இருவரும் வெவ்வேறு பலனை அடைகிறார்கள். வெளிப்படையாய்ச் சட்டசபையால் நமக்கு வரும் சாதகத்தைக் காட்டிலும் பாதகமே அடிக்கடி நேர்ந்திருக்கிறது. அதை இவ்விதம் வந்ததென்று நாம் அறிந்துகொள்ளாமல் மட்டும் அனுபவித்து வருகிறோம். இதை இன்னதென்று இப்பொழுது விரிக்கத் தயாராய் இல்லை. மற்றும், இவர்கள் லோகக்ஷேமத்தை உத்தேசித்து, ராஜாங்கத்தாரால் நமக்குச் செய்துகொடுக்கவேண்டிய கார்யங்களில் விவரித்துசண்டை போட்டாவது அச்சௌகர்யத்தை வாங்குங்களென்றனுப்பட்டதை அறியாமல் அவர்களுக்கதிகாரமில்லாததாயும் முடியாததும் நமக்குப் பரமவிரோதமுமான மத விஷயங்களின் சீர்திருத்தத்தையும் அவர்களிடம் கேட்க ஆரம்பித்தனர். அவ்விதம் செய்த பல அனர்த்தங்களை நாம் கவனியாமலே இருந்ததில் நம் வம்சத்தையும் மதத்தையுமழிக்கக்கூடிய விவாகச் சட்டம் ஒன்று இப்போது வந்துவிட்டது. இச்சட்டம் இந்தியாவில் உள்ள ஹிந்துமகமதியர்களைக் கட்டுப்படுத்துகிறது. இவ்வனீத சட்டத்தை இயற்ற ஆரம்பித்த அரசாங்கத்தாரிடம் வெறுப்புக்கொண்டு அக்காலத்தில் மகமதியர்கள் வெளியேறிவிட்டனர். பிறகு இதைச் சட்டமாகும்படி செய்தது கவர்ண்மெண்ட்தான். அக்காலத்தில் இதுநியாயமே இல்லையென்று முடிவுவரை சண்டைபோட்டவர் நம் சேஷய்யங்கார் ஒருவரே. இவருடன் இரண்டொருவர்மட்டும் சேர்ந்ததால் மெஜாரிடி பலம் இல்லாமல் இவரது வாதம் தோல்வியுற்றது. ஆகவே இந்துமதஸ்தர்கள் என்று நாமதாரிகளாய் பலரிருந்தும் காங்கிரஸ்காரர்கள் பலர் அச்சட்டத்திற்கு சாதகமாய் இருந்தும் இவரும் காங்கிரஸைச் சேர்ந்தவர் என்ற ஹோதாவில் அப்பதவி பெற்றிருந்தும் நம் வாதம் கரையேறாது என்று பூர்வமாய் அறிந்திருந்தும் நாம் ஈசுவரனுக்காக மனப்பூர்த்தியாய் கன்மாவைச் செய்தே தீரவேண்டும் அதன்பலாபலன் நம் ஸ்வாதீனமில்லை. "कर्मण्येवाधिकारस्ते" என்றபடி கன்மம் செய்யமட்டும் கட்டுப்பட்டவனென்ற சாஸ்திர நியாயப்படி முடிவுவரைசண்டைபோட்டதற்காகமட்டிலும் அவருக்கு உபசாரபத்திரம் கொடுக்க முன்வந்தோம். அதனாலேயே மதுரையிலுள்ள ஆஸ்திகமகாஜனங்கள் மட்டும் இதில் கலந்துகொண்டனர். இதனை நியாயமில்லை என்று கூறுபவர்கள் நாஸ்திகர்களென்று நாம் கூற

வில்லை. இயற்கையிலேயே அறிந்துகொள்ளலாம். இதற்கு இன்னொரு நியாயம் அடியேனல் அன்று சபையிற் கூறப்பட்டது. அதாவது—

ஓர் குருவினிடம் கல்வி கற்ற பல சீடருள் ஒருவனை நோக்கி அப்பா நான் தீர்த்தயாத்திரை போய்வருகிறேன். நீ உள்ளவர்களுக்குள் யௌவனமுள்ளவனுய் இருப்பதால் என்வீட்டுக் கார்யங்கள் யாவும் நான் இருந்தால் எவ்விதம் நடைபெறுமோ, எவ்விதம் என் மனைவி சந்தோஷமடைவாளோ அவ்விதம் என் ஸ்தானத்திலிருந்து சகல கார்யத்தையும் குறைவற நடத்து என்று கட்டளையிட்டுப்போனர். பிறகு ஒரு ஸமயம் குருபத்னீ ருது ஸ்நானம் செய்து அன்றிரவு தன்னுடன் கூடவேண்டுமென்றும் தான்கேட்பது சாஸ்திரீயமென்றும் நீயும் குருவின் கட்டளைப்படியும் நடக்கவேண்டுமென்றும் இல்லாவிடில் உனக்கு சாபம் நேரும் என்றும் பலவாறு நிர்ப்பந்தித்தாள். சிஷ்யன் யாது செய்வான். பிடிவாதமாய் அகார்யம் அக்கார்யமென்றும் அகார்யத்தையும் நீ செய் என்று குருவின் ஆக்ஞை தனக்கு இல்லையென்றும் மறுதளித்துவிட்டான். பிறகு குரு வந்தபிறகு அவன் செய்கையை மெச்சி அவனுக்கு ஏராளமான அனுக்கிரகம் செய்தனர். அதுபோல சட்டைசபையில் நமக்கு ஹிதமானதைச் செய் என்றுமட்டிலும் சொல்லியிருந்தோம்; இன்னின்னது செய்யத்தக்கது இது செய்யத்தகாததென்று குறிக்காமலிருந்ததில் சாஸ்திரமரியாதை தெரியாதவர் ஒருவர் மசோதாகொண்டுவந்தார். அதை சாஸ்திரமென்ற சொல்லேயும் தைவஸ்வரூபமின்னதென்றும் அறியாமல் ஹிரண்யகசிபு அம்சம் பெற்ற குறுகிய திருஷ்டியுள்ள சிலர் ஆமோதித்தனர். சிலரெனினும் அச்சபையிலுள்ளோரிற் பெரும்பாலர் என்றே சொல்லலாம். ஆகவே 'महाजनो येन गतः स पन्थाः' என்ற நியாயமேற்க நம் சேஷய்யங்காரும் அதையே பின்பற்றியிருக்கலாம். அவ்விதம் அவர் செய்யவில்லை. இது சாஸ்திரவிரோதம் தெய்வவிரோதம் ஆஸ்திகவிரோதம் தேசக்ஷேமவிரோதம் கடைசியாய் நம்மை அனுப்பியவர்களுக்கு விரோதம் என் அந்தராத்மாவுக்கும் விரோதம் என்று கண்டுகொண்டு திரமாய்க் கர்ஜித்தனர். ஆதலால் அவ்வம்சம் ஒன்றைக் குறித்துமட்டிலுமே அவருக்கு உபசாரப்பத்திரம் கொடுத்தது என்று முடித்தேன். இனி உபசாரப்பத்திரத்தின் வாசகத்தை எழுதுகிறேன்.

ब्रह्मश्री M. S. शेषय्यङ्गार् महाशयेभ्यः मधुरापुरिनिवासिभिरास्तिक महाजनैः प्रदत्ता कृतज्ञताविष्करण

प्रशस्तिपत्रिका ॥

श्रीमान् शेषो द्विजकुलमणिर्वैष्णवाग्रेसरोऽयं
लोकैस्सर्वैस्समधिकधिया चोदितो राजकार्ये ।
देशक्षेमे कृतदृढमतिस्स्वार्थमप्युज्जिहानः
राजत्यस्मिन् सदसि नृपतेस्सिद्धवद्विक्रमाढ्यः ॥ ॥१॥

अस्मिन् काले कलिविलसिताद्धर्महीने समस्ते
पाश्चात्यानामनुसरणतो मोहिते सभ्यवर्गे ।
धीरस्त्वेकस्सदसि विमुखेष्वास्थितो वेदमार्गे
कांस्कान् वादान् मणिवदतुलान् वावदूको ह्यकार्षीत् ॥२॥

एते सर्वेष्वधिकृतजना वेदमार्गस्य नाशे
हा हा कष्टं धृतपरिकरा ईश्वरोऽस्मान् सुरक्षेत् ।
यत्नोऽस्माकं फलतु च जवात् वर्धतां वेदधर्मो
धैर्यं दद्यात्स खलु भगवान् वैदिकेभ्यो जनेभ्यः ॥ ॥३॥

भूदेवोऽसौ विपुलधनवान् लोकविख्यातकीर्तिः
दीर्घं जीवेदिति दृढतनुर्वैदिकाचारगोप्ता ।
पुर्यामस्यां विलसनपरौ सुन्दराख्यौच देवौ
भूयोभूयः स्तुतिवरशतैर्वन्दते संसदेषा ॥ ॥४॥

मधुरायां शुक्लवत्सर तुलामासि अष्टादशदिने प्रदत्तेयं पत्रिका ।	इति मधुरानगरनिवासिनः । आस्तिकमहाजनाः ॥

மகா-ா-ா-ஸ்ரீ M.S. சேஷய்யங்கார் M.L.A., அவர்களுக்கு
மதுரைமாநகர் ஆஸ்திகமஹாஜனங்கள் நன்றியறிதலுடனளிக்கும்

உபசாரப்பத்திரம்.

ஆர்யரே !

மிகவும் மேன்மைபொருந்திய நமது ஸநாதனமான ஹிந்துதர்மத்தைக் காப்பாற்றுவதற்காக இந்தியாசட்டசபையிலும் வேறிடங்களிலும் தாங்கள் செய்துள்ள அத்புதமான காரியங்களையும் பேசியுள்ள புத்திசாலித்தனமான பேச்சுக்களையும் நாங்கள் மிகவும் பாராட்டி எங்கள் நன்றியறிதலையும் ஸந்தோஷத்தையும் தங்களிடம் தெரிவித்துக்கொள்ள அநுமதி கேட்கிறோம். ஆதி, அந்தம் இல்லாததும், இதுவரை எத்தனையோ படையெடுப்புக்களையும் பிறமதங்களையும் ஜயித்து விளங்குவதுமான நமது ஹிந்து தர்மத்தை இப்பொழுது பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரும் சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற நம் ஸஹோதரர்களில் சிலரும் இலேசாகப் பேனா முனையால் அழிக்க உத்தேசித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்த விவாஹமசோதா விசாரணையை அடுத்த சட்டஸபைக்கு ஒத்திவைப்பதற்குக்கூட நடுங்கி, மிக்க அவஸரத்தோடும் பிடிவாதத்தோடும் பஹிரங்கமான பாரபக்ஷத்தன்மை, பலாத்காரம் இவைகளைக்காட்டிச் சென்ற சட்ட ஸபையிலேயே மசோதாவை நிறைவேற்றினகொடுமை, உடனே வெகு சீக்கிரத்தில் ராஜப்பிரதிநிதி மேற்படி மசோதாவிற்கு ஸம்மதி கொடுத்த பரபரப்பு, சட்டஸபையில் தங்களுடைய நியாயவாதங்களுக்கு பதில் சொல்லமுடியாமல் எதிர்க்கக்ஷியார் சுற்றிச் சுழட்டிப்பேசிக் கேவலம் வோட்பலத்தையே நம்பின சிறுமை, இவைகளே நமது ஹிந்துதர்மம் ஒருகாலும் அழிக்கப்பட முடியாதென்பதற்குப் போதுமான உயர்ந்த ஸாக்ஷியங்களாகும்.

தெய்வீகமான நம்முடைய மதம், பாஷை, தர்மம், சாஸ்திரங்கள், ஆசாரம் இவைகளை இங்கிலீஷ் படிப்பினால் முழுவதும் மறந்து, மேல்நாட்டு நாகரீகத்தில் ஈடுபட்டு, இந்திரியங்களுக்கு வசமாகிப் பணத்தாசை மிகுந்து, பாபத்தில் பயமற்று, இவ்வுலக வாழ்வே பெரிதென்றெண்ணிப் பரலோகத்தையும் பகவானையும் கொஞ்சம்கூட நினைக்காமலிருக்கும் நம் ஹிந்து ஸமூஹத்

னைத்தட்டி எழுப்பி ஹிந்துமதம், வர்ணாசிரமதர்மம், ஸ்திரீதர்மம் இவைகளைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று இந்தக் குழந்தை விவாஹச் சட்டத்தின் மூலம், பகவான் நமக்கு எச்சரிக்கை செய்கிறார்.

ஹிந்துக்களாகிய நமக்கு விவாஹமென்பது வைதிகமான முக்கிய ஸம்ஸ்காரம். மோக்ஷத்தை அடைவதற்காக ஏற்பட்டுள்ள நான்கு படிகளில் இது இரண்டாவதாகும். சாஸ்திரம், யுக்தி, அநுபவம் இவைகளின் மூலம் பால்யவிவாஹமே சிறந்ததென்று அனேக ஆயிரம் வருஷங்களாக நாம் உலகத்தாருக்குக் காண்பித்திருக்கிறோம். இப்பொழுது நம் தேசத்திலுள்ள சீர்திருத்தக்காரர்களுள்பட எல்லாபுத்திமான்களும் பலவான்களும் பால்யவிவாஹம் செய்துகொண்ட தம்பதிகளின் புதல்வர்களேயொழிய வேறல்ல. சட்டஸபையில் தாங்கள் இதுபோன்ற ஆயிரக்கணக்கான நியாயங்களையும் யுக்திகளையும் எடுத்துக்காட்டி, எதிரிகளுடன் கடைசிவரையில் விடாமல் போராடினதைரியத்தையும், ஸாமர்த்தியத்தையும், பொறுமையையும் தக்கவாறு புகழ்வதற்கு அசக்தர்களாயிருக்கிறோம். ஆயிரம் நாக்கள் படைத்த ஆதிசேஷன் தான் தன் அம்சமாகிய மதுராபுரிச் சேஷனைப் புகழச் சக்தி வாய்ந்தவர்.

தாங்கள் ஹிந்துதர்மத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யும் முயற்சிகளில் நாங்கள் முழுவதும் ஒத்தாசை செய்யக் காத்திருக்கிறோம். பகவான் தங்களுக்கு தீர்க்கமான ஆயுஸ், ஆரோக்கியம், ஐசுவர்யம் இவைகளைக் கொடுத்து ஹிந்துதர்மஸ்தாபனத்திற்காகத் தாங்கள் மேன்மேலும் உழைத்து உதவிபுரியும்படி அநுக்ரஹிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
மதுராபுரி ஆஸ்திகர்கள்.

மதுரை,
3—11—'29.

நமது வேலை.

ஆர்யர்களே! நமது வேலை என்று பொதுவாய் ஒருவேலை மனிதஸமூகத்துக்கு உண்டு. அது நிச்சயமாய்ச் செய்யப்பட்டே தீரவேண்டும். என் வேலை என்ற தனிவேலை ஒன்று செய்யப்

படாமலிருந்தால் ஒருவனைமட்டும் தடைசெய்யும் என்பது எவ்விதம் அனுபவஸித்தமோ, அப்படியே நம் வேலை செய்யப்படாவிடில் நம் சமூகத்தைக் கெடுத்துவிடுமென்பதும் வெளிப்படையே. இது இதுகாறும் இவ்விதம் நம் வேலையென்பதை ஒத்துச் செய்யாமலே வந்தோம். அதனால் உண்டான அனர்த்தங்களையும் அனுபவிக்கிறோம். அது சகிக்கவும் முடியவில்லை. ஆனால் இவ்விதம் கெடுதல் என் வந்ததென்று தனித்தனியே ஒவ்வொருவனையும் கேட்டால் அவன் யாது பதிற் கூறுகிறான்? என்னவோ ஐயா! ஒற்றுமையில்லாமல் இப்படிக்கெட்டது, யார் என்ன செய்கிறது? அவனுக்கு வந்தது நமக்கும்தான் என்கிறார். இவ்விதம் ஒவ்வொருவனுடைய மனதிலும் இருந்தும் என் ஒற்றுமை வாவில்லை? அது காலவியல்பே. இதை இதன்மூலமாய் அறிவோம். ஓர் கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு காலவித்தியாஸத்தால் ஒற்றுமை குறைவு அதிகப்பட்டது. அதனின்றும் ஏரியில் சரியானகாலத்தில் ஜலம் கட்டாமலும் வாய்க்கால் செப்பனிடாமலும் போய்விட்டபடியால் விளைவுக்குறைவும் ஏற்பட்டு யாவரும் நஷ்டமடைந்தனர். இவ்விதம் இப்போது ஒவ்வொரு கிராமத்திலும் பார்க்கலாம். ஆகவே ஒற்றுமைக்குறைவு பலவிதத்திலும் ஏற்பட்டு நாம் வருந்துகிறோம். இனி இப்போது உண்மையில் நமக்கு நன்மையைத் தருவதற்கு வந்திருக்கிற விவாகச்சட்டமும் நம் சமூகங்களால் அவசியம் கவனிக்கத்தக்கதாய் வந்திருப்பதால் முன்கூறிய சமூகவேலைபோல் நாம் பேசாமலிருக்கிறதற்கில்லை என்பதும் இப்போது மெள்ள ஒவ்வொருவரும் அறியத்தலைப்படுகின்றனர். இதனிமித்தம் இப்போது 19—10—29-ல் திருச்சியில் கூடிய தமிழ் ஜில்லாக்களின் ஸபையில் செய்திருக்கிற தீர்மானப்படி நாம் வேலை செய்யத் துவக்குவதுதான் உத்தமம்.

அங்கு செய்த தீர்மானங்களாவன:—

1. நம் ஆர்யமதத்தை மேன்மேலும் ஓங்கிவளரச்செய்வதற்காக முக்கியமாய் நமக்கு இங்கிலீஷிலும் தமிழிலும் ஓர் தினஸரிப் பத்திரிகை ஆரம்பிக்கவேண்டும். அது உலகசமாசாரம் வெளியிடுகிறதாகவும் நம் மதத்தின் தத்துவங்களை அப்போதப்போது விளக்குவதாயும் இருக்கவேண்டும். அப்பத்திரிகை டிஸம்பர் 1வக்குள் ஆரம்பிக்கப்பட்டுவிடவேண்டும்.

இதற்கு மூலதனம் 3 லக்ஷம் ரூபாய் வேண்டும். 100ரூபாய் 1பங்குக்கு என்று ஏற்படுத்தி 3000 பெயர்கள் பங்காளிகள் ஏற்படவேண்டும். இவ்விதம் 3000 ஆஸ்திகர்கள் நம் தேசத்தில் கூடியசீக்கிரம் சேரா முன்வாதபக்ஷத்தில் நாம் மதரக்ஷகர்களாக ஒருபோதும் ஆகமாட்டோம் என்று மகா-ா-ா-ஸ்ரீ T. R. ராமச்சந்திரய்யாவர்கள் மிக அனுதாபத்தோடு ஸபையில் தெரிவித்தனர். ஆகவே 3000 பெயர்கள் நம் தமிழ்நாட்டிலேயே சேரா ஆஸ்திகர்கள் இல்லாமற் போய்விடவில்லை. இதில் அன்று சபையிலேயே 1000ரூபாயாக அநேக பிரபுக்கள் கையெழுத்திட்டனர். சீயாழி குன்னம் மகா-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணியஅய்யாவர்கள் 3000 ரூபாய் கையெழுத்திட்டனர்.

2. பிறகு பிரதி ஜில்லாக்களிலும் பிரதானஸபை ஒன்றும், அதைச்சார்ந்தவைகளாய் தாலூகாக்களில் ஒவ்வொன்றிலும் ஓர் சபையும் அவைகளைச்சார்ந்த பிரதிகிராமத்திலும் ஓர் சபையும் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்தனர்.

சபையின் நோக்கம் யாதெனில் நமது பிராசீனதர்மங்களை முன்போல் வளரச்செய்வதும் ஒவ்வொரு கிராமத்திலும் சக்திக்கு தக்கபடி ஒன்றிரண்டு பண்டிதர்களை வைத்து ஆதரித்து ஆஸ்திகர் யாவருக்கும் ஆசாரம் முதலியன கற்பித்து பிராமணக்குழந்தைகளுக்கு அக்ஷராப்யாஸம்முதல் ஸம்ஸ்கிருதப்பயிற்சி செய்வித்து முன்னாளிற்போல் இளம்வயதிலேயே ராகவாஷ்டகம் மூஷிகவாகனம் ஸரஸ்வதிஸ்தோத்திரம் பாலராமாயணம் முதலியன கற்பிக்கவும் உபனயனமானபிறகு ஸ்வரத்தோடு மந்திரத்தைச் சொல்லிவைத்து அனுஷ்டிக்கச்செய்யவேண்டியதே முதற்கடமை.

பிறகு உபன்யாஸம் புராணபடனமூலமாய் எல்லா வருணத்தவருக்கும் தேவதாபக்தியையும் பெரியோர்களிடம் வணங்கும் தன்மையையும் உண்டுபண்ணவேண்டும்.

கிராமத்தில் ஏதாவது மதவிஷயத்தில் சந்தேகம் ஏற்பட்டு விவாதம் வந்தால் அதை அச்சபையோர்கள்மூலம் தெரிந்துகொண்டு அதன்படி ஒழுகவேண்டும்.

சந்தேகம் சாமான்யமாய் இருந்து அங்கேயே தீர்மானம் ஆய்விட்டாலும் அதை அச்சபையார் மகாசபைக்குத் தெரியப்படுத்தி அதன்மேல் ஆர்டர் பெறவேண்டும்.

இச்சபைக்கு அங்கத்தினர் லௌகிகர்கள் வைதிகர்கள் பிராமணரல்லாதவரும் ஏற்படலாம். ஆனல் தர்மசாஸ்திரவிஷயத்தில் மட்டிலும் அவர்கள் கலக்கரோது.

இதன்மூலம் நாளடைவில் ஒற்றுமை ஏற்பட்டு லௌகிகவிஷயத்திலும் இச்சபையிலேயே சுலபமாய் நியாயம் தேடிக்கொண்டு சமூகஒற்றுமை ஏற்பட வழியுண்டு. பட்டணங்களில்உள்ள சபைகளிலும் மேலான சபையிலும் சட்டநிபுணர்களெல்லோரும் இருப்பதால் கோர்ட்டில்போய் ஏராளமாய் செலவுசெய்யவேண்டிய நியாயம் ஏற்படாது. இவ்விதம் இச்சபை ஏற்படுதல் இதற்குமுன் இல்லாவிடினும் நம் பிராசீனகாலத்தில் இருந்ததென்பது மனுஸ்மிருதியிலிருந்து அறியலாம்.

ग्रामदोषान् समुत्पन्नान् ग्रामिकश्शनकैस्स्वयम् ।
शंसेद्ग्रामदशेशाय दशेशो विंशतीशिनम् ॥
विंशतीशस्तु तत्सर्वं शतेशाय निवेदयेत् ।
शंसेद्ग्रामशतेशस्तु सहस्रपतये स्वयम् ॥

கிராமத்தில் உண்டாகும் தோஷங்களை அவ்வதிகாரி 10 கிராமத்தின் அதிகாரிக்குத் தெரியப்படுத்தவேண்டும். அவன் 20 கிராமாதிகாரிக்கும், அவன் 100 கிராமாதிகாரிக்கும், அவன் 1000 கிராமாதிகாரிக்கும் அறிவிக்கவேண்டும்என்று. இவ்விதமேதான் நமது சபையும் ஏற்படலாம்.

இச்சபைக்குப் பெயர் ஹிந்துதர்மஸபா என்று. இவ்விஷயத்திலும் சற்று விவாதம் நடந்தது. ஸநாதனதர்மஸபா என்று பெயர் வைப்பதானல் வடக்கே இருக்கும் அப்பெயர்கொண்ட சபையில் ஆர்யஸமாஜிகளும் சேர்ந்திருக்கின்றனர். ஆகவே அப்பெயர் வைத்தால் நாம் ஆரம்பித்ததற்குப்பிரயோசனமேற்படாது. ஹிந்துமகாஸபை என்றாலும் மாளவ்யா ஏற்படுத்திக்கொண்டு சாஸ்திரவிரோதமாய் நடத்தும் ஸபைக்குச் சார்ந்ததோவென்று சங்கைகொள்ள நேருமென்று கொண்டு இப்பெயரை ஏற்படுத்தினர்.

இனி அம்மகாஸபையின் தீர்மானத்தின்படி இம்மதுரைமாநகரில் மகா-ா-ா-ஸ்ரீ N. நடேசய்யாவர்கள் பங்களாவில் ஓர் பொதுக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. அதில் திருச்சிஸபையின் நோக்கங்களைக் கூறியபின் ஜில்லாஸபை ஒன்று ஏற்படுத்தப்

பட்டது. மற்றும் சமீபத்தில் முதலில் நடத்தவேண்டிய முக்கியமான அம்சம் அத்திருச்சிஸபையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதை நான் முன்னமே கூற மறந்துவிட்டேன், அதை இங்கு கூறிவிட்டுப் பிறகு பிரகிருதத்திற்கு வருகிறேன். அதாவது—

நம் நாட்டு ஆஸ்திகர் ஒவ்வொருவரும் 18-வயதுக்கு மேற்பட்டவனானால் அவன் 1-வருடத்திற்கு 8-அணாவாவது கொடுத்து இச்சபையில் ஆணும் பெண்ணும் மெம்பராய்ச் சேரவேண்டும். இம்முறையை எடுத்துக்கூறி ஒவ்வொரு கிருகத்திலிருந்தும் மொத்த நபர்களின் கணக்குப்படி பணவசூல் செய்யவேண்டும். இவ்வித வசூலும் சமீபத்தில் வரும் தீபாவளியிலேயே ஆரம்பிக்கலாம் என்றும் ஏற்பட்டிருந்தது. இந்த நியாயப்படி மதுரையில் தீபாவளியன்று மிகமுயற்சியுடன் வசூல்செய்தார்கள்.

இவ்விதம் ஒவ்வொரு ஊரிலும் இனிமேலும் செய்ய ஆரம்பிக்கவேண்டும். இவ்விதம் வசூலாகும் தொகையில் சரிபாதி அந்தந்த ஊர் ஸபையில் வைத்துக்கொண்டு பாக்கியைச் சென்னையிலிருக்கும் நமது பிரதானஸபைக்கு அனுப்பவேண்டும். அல்லது அந்தந்த ஜில்லா ஸபைக்கு அனுப்பினாலும் அவர்கள்மூலம் பிரதானஸபைக்குப் போய்ச்சேரும். இக்காலத்தில் பணமில்லாமல் யாதொன்றும் செய்யமுடியாததால் இவ்விஷயத்தில் ஆஸ்திகர்கள் யாவரும் பின்வாங்கக்கூடாது. வருஷத்தில் ஒருவீட்டில் மூன்று நான்குபெயர்கள் இருந்தால் 2-ரூபாவரை சேர்த்துக்கொடுக்க சிரமம் தோன்றினாலும் இம்முதற்தடவைக்குமட்டிலும் சிரமப்பட்டுக் கொடுத்துவிட்டு அடுத்தபடிக்கு அடியேன் கூறும் சௌகர்யப்படி நடத்தலாமென்று வெளியிடுகிறேன்.

கிறிஸ்தவமதஸ்தர்கள் மேனாடுகளில் மதவிஷயத்திற்காக ஒரு குடித்தனத்திலுள்ள நபர் 1-க்கு 1பென்ஸ் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் கொடுக்கிறதென்று வைத்துக்கொண்டிருக்கின்றனர். அதன்படி கர்ப்பத்திலிருந்து ஞாயிறன்று ஒரு சிசு ஜனித்தபோதிலும் அந்த ஞாயிறிலிருந்து அச்சிசுக்கும் கொடுக்கின்றனர். இவ்விதம் மிஷனுக்கு நாளது பரியந்தம் சேர்ந்திருக்கும் தொகை எத்தனையோ கோடிகள் இருக்கின்றனவாம். அதிலிருந்துதான் ஊர் ஊராய் மிஷனரிகளையும் சர்ச்சுகளையும் கட்டுகின்றனர். இது போல் நாமும் இனி நம்மதத்தை முன்னுக்குக்கொண்டுவந்து நம் சந்ததிகளைக் காப்பாற்றவேண்டுமென்று விரும்பினால் இதுமுதல்

ஒவ்வொரு குடும்பத்திலும் அத்தலைவன் தலைக்கு ஒரு பைசாவீதம் பிரதிவியாழக்கிழமையிலாவது வெள்ளிக்கிழமையிலாவது போடுவதென்ற நியமம் வைத்துக்கொண்டால் நம் நாட்டில் பெருகும் தொகைக்குஅளவுண்டோ. இதைஎல்லாஆஸ்திகர்களும்கட்டாயம் கைக்கொள்ளவேண்டும். நமக்கோ செலவுக்கு ஏராளமான பணம் தேவை. பணமில்லாமல் யாதுகாரியமும் நடைபெறாது. கிராமம் கிராமமாய் இவ்விஷயங்களை எடுத்துரைக்கப் பிரசாரகர்கள் போகவேண்டும். துண்டுப்பிரசுரங்கள் ஏராளமாய் வெளியிடவேண்டும். ஆஸ்திகர்களே இனியும் நமக்குத் தூக்கம் வேண்டாம். இனி நம்மைஎழுப்ப ஒரு அதிகாரி வரமாட்டான். அவனவன் தனக்குத் தனக்கே அதிகாரி. ஒருவரையொருவர் குற்றம் குறை கூறமுடியாது நம்முள் சீர்திருத்தக்காரர் 100க்கு ஒருவரோ என்றிருக்கிறது. மெஜாரிடி நம்மிடமிருக்கிறது. இதை மதுரையிலுள்ளார் அறிந்துவிட்டனர். இப்போது இவ்விஷயமாய் கங்கணம் கட்டி உழைக்க முன்வந்திருக்கும் மதுரை அட்கேட் ஸ்ரீமான் N. நடேசய்யாவர்கள் பிரதி தாலூகாக்களிலும் சபையை ஏற்படுத்துவதற்காக ஜகதீசய்யரென்ற ஆஸ்திகரோடு திருமங்கலம் மேலூர் பரமக்குடி மானாமதுரை சிவகெங்கைக்களுக்குச்சென்றதில் மிகுந்த உத்ஸாகமான கூட்டம் நடந்ததென்றும், திருமங்கலத்திலும் மானாமதுரையிலும் மட்டிலும் இருவர் வாலிபர்கள் வேதசாஸ்திரங்கள் மோசமென்றும் சாரதாசட்டம் லோகோபகாரத்திற்கு வந்திருக்கிறதென்றும் கூறினர்களாம். ஆஸ்திகர்களே! இதனால் ஒவ்வொரு ஊரிலும் ஒருவன் இருவர் நவநாகரீகத்தில் மூழ்கியிருந்தால் நம்மதம் கெட்டுவிடுமா? அவர்களை நாம் திரும்பவும் வழிதேடவும் வேண்டாம். அவர்கள் அவ்வழியிலிருப்பது நம்மதத்திற்கு மேன்மையைக்கொடுக்கும். கெடுதல் இருந்தால்தான் நன்மை தழைத்துப் பிரகாசிக்குமென்று ஆன்றோர் எண்ணம். ஆகவே சட்டமாய் விட்டதே என்று தயங்கவேண்டாம், தங்கள் தங்கள் கிராமத்தில் தாங்களே சபை கூட்டுங்கள். திருச்சி சபையை பின்தொடருங்கள். இச்சட்டத்தைப்பற்றி ஒரு முயற்சியையும் காணோமே. எல்லோரும் பேசாமலிருக்கிறார்களே என்ன செய்கிறதென்று ஒவ்வொருவரும் யோசித்துக் கொண்டிருக்கவேண்டாம். பரமாசார்யாது திருவடிகளை சரணமடையுங்கள். இனி சும்மாயிருக்கச் சமயமில்லை.

—— M. N. சுப்பிரமணியசாஸ்திரி

சாரதா மசோதாகண்டனம்.

(தேவகோட்டை.)

இவ்வூர் வைதிகதர்மாசாரஸபையின் ஆதரவில் நாளது சுக்ல வருஷம் ஐப்பசிமாதம் 9, 10, 11 தேதிகளான வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6-30மணிக்கு ஸ்ரீஜகத்குரு காம கோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் அனுக்கிரஹத்தை முன்னிட்டு சிலம்பனி சிதம்பரவிநாயகர்சன்னிதி துவாதசிமடத் தில் கலியாணவயதைக்குறித்து சாரதாபில் சட்டமாக்கப்பட்டி ருப்பதை நிராகரிப்பதற்காகவும் நமது மதங்களைப் பாதுகாக்க வும் மகா-ள-ள-ஸ்ரீ வக்கில் ஆர். கணபதிஅய்யாவர்கள் அக்கிரா சனத்தில் ஒரு கூட்டம் கூடி அடியில்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

1. ஆஸ்திகர்களான நாம் விவாகச்சட்டமசோதா பாஸ் ஆயிருந்தாலும் ஆகாததாகவே நினைத்து ஊக்கத்துடன் இருந்து வைதிகதர்மத்தைக் காக்கவேண்டியது.

2. மடாதிபதிகளான ஆசாரியஸ்வாமிகளும் சுயமாசாரிய புருஷர்களும் அங்கங்கேயுள்ள பிரதான சிஷ்யர்களுக்கு வைதிக தர்மத்தைக் கைவிடாது காக்கவேண்டுமென்னும் விஷயத்திற்கு ஸ்ரீமுகங்கள் அனுப்புவதுடன் பண்டிதர்களையும் ஒவ்வொரு ஊர்களுக்கும் அனுப்பி ஆஸ்திகதர்மங்களைப் பிரசாரம் செய்ய வேண்டும்.

3. தெருத்தெருவாய் ஊர்ஊராய்ப்போய் ஜனங்களுக்குச் சாரதாசட்டத்தை ஆதரியாது ஊக்கத்துடனிருக்கும்படி இச் சபையினுதாவில் கூட்டங்கள் கூட்டவேண்டும் என்று.

இதுவிஷயத்தில் வைதிகதர்மாசாரஸபையின் காரியதரிசி யான மகா-ள-ள-ஸ்ரீ அட்வகேட் சுப்பிரமணிய அய்யாவர்களுடைய பரிசிரமமும் பிரசங்கங்களும் பாராட்டத்தகுந்தன.

இவ்விதமே இந்த வைதிகதர்மாசாரஸபையினுதாவில் ஐப்பசி மாதம் 15௳ 31-10-29 வியாழக்கிழமை இவ்வூர் சிவன்கோவில் மந்திரமஹோபதேசக்கொட்டகையில் மகா-ள-ஸ்ரீ வக்கீல் பண்டிட் நாகாத்திநமய்யாவர்கள் அக்கிராசனத்தில் ஒரு பொதுக்கூட்ட மும், அவ்வாறே 2—11—29 சனிக்கிழமைதினம் மகா-ள-ள-ஸ்ரீ டாக்டர் M. G. சுப்பிரமணியஅய்யாவர்கள் அக்கிராசனத்தில் ஒரு பொதுக்கூட்டமும் கூடின. முதல்நாள் மகா-ள-ஸ்ரீ வக்கீல்

நாகாத்தினமய்யரவர்கள் அக்கிராசனராயிருந்து சாஸ்திரவிஷயங்களையும், லௌகிகவிஷயங்களையும் நன்றாய் உபன்னியஸித்தார். பிறகு பண்டிட் N. கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள் உபன்னியஸித்தார்கள். மறுநாள் அட்வகேட் மகா-ா-ா-ஸ்ரீ S. சுப்பிரமணிய அய்யரவர்கள் 2½-மணிநேசகாலம் இந்த மஸோதா ஹிந்துக்களென்று பெயர்கொண்ட வைதிகர்களான நமக்கு பூராவாய் விரோதமாயிருக்கின்றது. நமக்கு வேதசாஸ்திரங்களே பிரமாணங்களாகும். நாம் வேதசாஸ்திரரூபமான ஈசுவரசட்டத்தையனுஸரிப்பதுதான் முறை என்ற விஷயத்தையும், இந்தச் சட்டத்தால் நமக்குண்டாகக்கூடும் பெருந் தீங்குகளையும் ஸவிஸ்தாரமாய் உபன்னியஸித்தார்கள். பிறகு முன்போல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் திருச்சி ஸெலெக்ட்கமிட்டிக்கூட்டத்தில் செய்த தீர்மானங்களை ஆதரிக்கவேண்டுமென்றும் இந்தியா மந்திரிக்கு எல்லோரும் சேர்ந்து அளவில்லாக் கையொப்பங்கள் வாங்கியனுப்பவேணுமென்றும் தீர்மானங்கள் செய்து முடிவில் அக்கிராசனர் முடிவுரையுடன் சபை கலைந்தது.

நா. கிருஷ்ணசாஸ்திரிகள்.

ஸ்ரீ ஜகத்குரு வித்யாஸ்தானம் மாணவர் சங்கம்.

திருவானைக்காவல் ஸ்ரீ ஜகத்குரு வித்யாஸ்தானம் ப்ரின்ஸிபால் ப்ரம்மஸ்ரீ B. விச்வநாதசாஸ்திரிகள் அவர்களது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஷை கலாசாலை மாணவர்களுடைய சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பெற்றது. அதற்கு A. S. ஸ்ரீனிவாஸ சர்மா தலைவராகவும், R. நடராஜன் காரியதரிசியாகவும் மெஜாரிடி ஓட்டுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இச்சங்கத்தினுதவில் 9—11—29 சனிக்கிழமை பிற்பகல் 2-மணிக்கு கணிதாசிரியர் V. S. வெங்கடராமசாஸ்திரிகள் அக்ராஸனத்தின்கீழ் ஓர் கூட்டம் நடைபெற்றது. முடிகொண்டான் ராமசுப்ரமண்யசாஸ்திரிகளால் கல்வி என்னும் விஷயம் உபன்னியசிக்கப்பட்டது. அதன் தொடர்பாக R நடராஜன், அச்யுத சர்மா இவர்களால் பாரமார்த்திகக்கல்வியறிவுடன் ராஜீயசமூக பொருளாதார அறிவின் ஆவசியகம் மிகவும்பலமாக வற்புறுத்தப்பட்டு கடைசியாக அக்கிராஸனாது முடிவுரையுடன் கூட்டம் கலைவுற்றது.

காரியதரிசி.